# தருமபுரி மாவட்டம், பாலக்கோடு ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட புலிக்கரை மற்றும் கெண்டேனஅள்ளி தமிழ்நாடு கிராம சாலை மேம்பாடு திட்டத்தின்கீழ் 2016-2017-ம் ஆண்டு ஈரடுக்கு ஜல்லி மற்றும் தார்சாலை அமைக்கும் பணிகளை மாண்புமிகு உயர்கல்வித்துறை அமைச்சர் திரு.கே.பி. அன்பழகன் அவர்கள் பூமி பூஜை செய்து தார்சாலை அமைக்கும் பணியினை தொடங்கி வைத்தார்.

  

தருமபுரி மாவட்டம், பாலக்கோடு ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட புலிக்கரை ஊராட்சிக்குட்பட்ட பேகரஅள்ளி சாலை முதல் பஞ்சன்கொட்டாய் சாலை வரை 1 கி.மீ. தூரத்தில் ரூ. 22 இலட்சத்து 87 ஆயிரம் மதிப்பில் ஈரடுக்கு ஜல்லி மற்றும் தார்சாலை அமைத்தல்இத்திட்ட பணிகளுக்கான தார்சாலை அமைக்கும் பணியினை பூமி பூஜை செய்து தொடங்கப்பட்டுள்ளது. அதேபோல் பாலக்கோடு ஒன்றியத்திற்குட்பட்ட பஞ்சப்பள்ளி சாலை முதல் கெண்டேனஅள்ளி சாலை ரூ. 75 இலட்சத்து 40 ஆயிரம் மதிப்பில் 5 ½ கி.மீ. தூரம் தொலைவில் தார்சாலை அமைக்கும் பணியினை பூமி பூஜை செய்து மாண்புமிகு உயர்கல்வித்துறை அமைச்சர் திரு.கே.பி. அன்பழகன் அவர்கள் தலைமையில் இப்பணியினை தொடங்கி வைத்தார்.

இந்நிகழ்ச்சியில் செய்தி மக்கள் தொடர்பு அலுவலர் திரு.இரா. சண்முகசுந்தரம், பாலக்கோடு வட்டார வளர்ச்சி அலுவலர் (வ.ஊ) திரு.பெ.செந்தில்குமார் மற்றும் வட்டார வளர்ச்சி அலுவர் (கி.ஊ) திரு.என்.ராமஜெயம், பாலக்கோடு கூட்டுறவு சர்க்கரை ஆலை தலைவர் திரு.கே.வி. அரங்கநாதன், கூட்டுறவு நிறுவனங்களின் பணியாளர்கள் கூட்டுறவு சிக்கன மற்றும் கடன் சங்கத் தலைவர் திரு. எம். பழனிசாமி, முன்னாள்

ஊராட்சிக்குழு தலைவர் திரு. தொ.மு. நாகராஜன், முன்னாள் ஒன்றிய பெருந்தலைவர் திரு.கோபால், புலிக்கரை முன்னாள் ஊராட்சிமன்ற தலைவர் திரு. செந்தில்குமார் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

---

வெளியீடு :- செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், தருமபுரி.